| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

**Part III**

# மனையியல் / HOME SCIENCE

( Tamil Version )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 150

**பகுதி அ :** **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பகுதி ஆ :** ஏதேனும் **பதினைந்து** வினாக்களுக்கு விடையளிக்கவும்.

**பகுதி இ :** **முதல்** கேள்விக்கு ( வினா எண் 71 அல்லது 72 ) கட்டாயமாக பதிலளிக்க வேண்டும். மீதி உள்ளவற்றில் ஏதேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**பகுதி ஈ :** ஏதேனும் **நான்கு** கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும்.

## பகுதி - அ

*குறிப்பு :* **அனைத்து** வினாக்களுக்கும் விடையளி. $15 \times 1 = 15$

I. கோடிட்ட இடத்தை நிரப்புக :

1. ........................ என்பது இரத்தம் சம்பந்தப்பட்ட கோளாறாகும்.

2. ........................ என்பது சுத்தியல் வடிவம் போன்ற அமைப்புடைய எலும்பாகும்.

3. தைராய்டு சுரப்பி ........................ ஹார்மோனை சுரக்கிறது.

4. கால்சியம் குறைவு ........................ என்ற நோயினுக்கு வழிவகுக்கும்.

5. உணவு கலப்படத்தைத் தடுக்கும் சட்டம் ........................ ஆம் ஆண்டு செயல் படுத்தப்பட்டது.

6. சிக்கல் வாய்ந்த பருவம் ........................ பருவமாகும்.

[ Turn over

7. வாழ்க்கையின் வளர்ச்சி நிலையை நிறைவு செய்யும் காலம் ........................ .

8. ........................ ஏற்பட்ட பார்வை இழப்பு என்பது பிறவியில் பார்வையின்றி பிறத்தல் ஆகும்.

9. விவசாயப் பொருட்களுக்கு அளிக்கப்படும் குறியீடு ........................ .

10. உஷ்ணத்தை எப்போதும் 0°C அல்லது 32°F நிலையிலேயே வைக்கும் கருவி ........................ .

11. ........................ தையல் என்பது ஒரு திடமான நிரப்பு தையல் ஆகும்.

12. பிரெஞ்சு முடிச்சு ........................ தையல் போன்று பயன்படுத்தப்படுகிறது.

13. ........................ வேடிக்கையான முறை படிப்பறிவில்லாத மக்களுக்கும், குழந்தைகளுக்கும் கல்வியறிவு அளிக்கக் கூடியதாகும்.

14. ........................ என்பது செயற்பாங்கின் நடைமுறை மூலமாக செய்திகளை ஆரம்ப இடத்தில் இருந்து பெறுபவருக்கு இடமாற்றம் செய்வதே ஆகும்.

15. ........................ முறையானது அதிக ஆற்றல் வாய்ந்த கற்பிக்கும் முறையாகும்.

II. கீழ்க்காண்பவற்றைப் பொருத்துக : $10 \times 1 = 10$

| | |
|---|---|
| 16. முதலுதவி | அ) தளர்வுறும் காலம் |
| 17. டெட்டனி | ஆ) இரும்பு துகள்கள் |
| 18. பூரிப்பு நிலை | இ) பாரதைராக்ஸின் |
| 19. இரும்பு | ஈ) 1877 |
| 20. ரவை | உ) கட்டாய சேமிப்பு |
| 21. முதுமை | ஊ) சீர்செய்தல் |
| 22. GPF | எ) வட்டமேசை விவாதம் |
| 23. தைத்து மூடுதல் | ஏ) இலைகள் போன்று தோற்றமளிக்கும் |
| 24. லேசி டெய்சி | ஐ) 10 நாட்கள் |
| 25. விவாதக் குழு | ஒ) இரத்த சோகை. |

III. கீழ்க்கண்டவை சரியா அல்லது தவறா எனக் கூறுக : 6 × 1 = 6

26. முதலுதவி கற்றல் என்பது ஒரு குடிமகனின் சமூகப் பொறுப்பாகும்.

27. வைட்டமின் C குறைவு ஏற்படும்போது பெரிபெரி என்னும் நோய் ஏற்படுகிறது.

28. ஆண்கள், பெண்களைவிட மிக விரைவில் முதிர்வுறுவார்கள்.

29. சூரிய அடுப்பு 450°C வெப்பத்தை அளிக்கவல்லது.

30. ஓவர்ஹேண்ட் தையல் என்பது ஓவர்காஸ்ட் தையல் போன்றதே ஆகும்.

31. விரிவுரையாற்றுதல் என்பது ஒரு கலையல்ல.

IV. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக : 5 × 1 = 5

32. ஆடைகளுக்கான பருத்தித் துணியின் அகலம் பொதுவாக ........................ அளவு கொண்டிருக்கும்.

அ) 92 செ.மீ.

ஆ) 72 செ.மீ.

இ) 55 செ.மீ.

ஈ) 100 செ.மீ.

33. இரத்தத்தின் pH அளவு

அ) 7·4

ஆ) 7·2

இ) 6·5

ஈ) 7.

34. காம்ப்ளான் என்பது இதன் உதாரணம்

அ) கலவையான உணவு

ஆ) முன்பே ஜீரணிக்கப்பட்ட உணவு

இ) இயற்கையான திரவ உணவு

ஈ) சரிவிகித உணவு.

35. சமூகத்தில் தனிமைப்படுத்தப்படும் காலம்

அ) பின் முதிர் வயது

ஆ) முன் முதிர் வயது

இ) முதுமைப் பருவம்

ஈ) முதிர் வயது பருவம்.

36. மிகவும் நீண்ட, மெல்லிய, கூர்முனையுடைய ஊசி என்பது

அ) க்ரூயல்

ஆ) மென்பட்டு மேசை துணிக்கான செனில்

இ) மணி கோர்க்கப் பயன்படுவது

ஈ) டேப்பஸ்ட்ரி.

V. ஓரிரு வார்த்தைகளில் விடையளி : 14 × 1 = 14

37. உணவுத் துறையில் பயன்படுத்தப்படும் ஒரு செல் காளான் எது ?

38. NaCl என்பது என்ன ?

39. சர்க்கரை நோய் ஏற்பட காரணமான ஹார்மோன் எது ?

40. மஞ்சட்காமாலையால் பாதிக்கப்படும் உறுப்பு எது ?

41. உணவு ஒவ்வாமையின் அறிகுறி இரண்டு எழுதுக.

42. BIS - விரிவாக்கம் தருக.

43. வைட்டமின் D குறை நோய் ஒன்றை எழுதுக.

44. "முழு வளர்ச்சிப் பருவ வயது" ( Age of Manhood ) என்று அழைக்கப்படும் பருவம் எது ?

45. வருவாயின் வகை ஒன்றை எழுது.

46. நிர்வாக செயல்பாட்டில் ( Management process ) ஏதாவது ஒரு முறையை எழுதுக.

47. சித்திரப் பின்னல் தையலில் ஏதேனும் ஒன்றை எழுதுக.

48. நிரப்புத் தையல் ஒன்றை எழுதுக.

49. சிறப்பான கத்திரிக்கோலின் அளவு என்ன ?

50. பை வரைகட்டத்தின் மற்றொரு பெயரைக் குறிப்பிடுக.

## பகுதி - ஆ

I. *குறிப்பு :* ஏதேனும் 15 வினாக்களுக்கு முப்பது வார்த்தைகளுக்கு மிகமாமல் விடை அளிக்கவும் : $15 \times 2 = 30$

51. ABC விதியை விளக்குக.

52. தேனின் ( Honey ) பயன்கள் இரண்டை கூறு.

53. சிர்ரோசிஸ் என்றால் என்ன ?

54. ஏஸ்டிக்மேட்டிஸம் என்றால் என்ன ?

55. ஹைட்ரோகுளோரிக் அமிலத்தின் பயன்கள் இரண்டு எழுதுக.

56. நோஞ்சான் நோயின் அறிகுறிகள் இரண்டைக் கூறு.

57. மைனாவாய் ( ஆங்குலார் ஸ்டோமாடைட்டிஸ் ) என்றால் என்ன ?

58. குழாய் மூலம் உணவு செலுத்துவதால் ஏற்படும் நன்மைகள் யாவை ?

59. பிரெயில் ( Braille ) - விளக்கம் தருக.

60. தலைமுறை இடைவெளி ( Generation gap ) என்றால் என்ன ?

61. குழந்தைகளிடம் ஏற்படும் எதிர்மறையான விளைவுகளுக்கான காரணங்கள் ஏதாவது நான்கு எழுதுக.

62. ஃபாந்தம் ஊனங்கள் ( Phantom Handicaps ) என்றால் என்ன ?

63. நிர்வாகம் ( Management ) என்றால் என்ன ?

64. கணக்குப் பதிவியலின் வகைகளை எழுதுக.

65. தர அடையாளம் ( Brand ) விளக்கம் தருக.

66. பொருத்தி இணைப்பவை ( Fasteners ) என்றால் என்ன ?

67. ஹெம்மின் வகைகளை எழுது.

68. கால அறிவிப்பு வெளியீட்டு பலகையின் ( Bulletin Board ) பயன்கள் நான்கு எழுதுக.

69. நிலப்படங்கள் ( Maps ) வரையறு.

70. சான்றுடன் விளக்கும் முறையின் மதிப்பு/பயன்கள் ஏதாவது நான்கு எழுதுக.

[ Turn over

## பகுதி - இ

VII. *குறிப்பு :* வினா எண் **71** அல்லது **72** க்கு கட்டாயமாகவும், மீதியுள்ள வினாக்களுள் ஏதேனும் **ஐந்தினுக்கு** விடையளிக்கவும். விடைகள் ஒவ்வொன்றும் 100 வார்த்தைகளுக்குக் குறையாமல் இருக்க வேண்டும். $6 \times 5 = 30$

**71.** காயங்களின் வகைகளை எழுதுக.

*அல்லது*

**72.** முதலுதவிப் பெட்டியில் இருக்க வேண்டியவை எவை ?

**73.** தோலின் பணிகள் ஏதேனும் ஐந்தினை குறிப்பிடுக.

**74.** உமிழ் நீரின் பணிகள் யாவை ?

**75.** உயிர்சத்து A குறைவினால் ஏற்படும் குறைபாடுகளைப் பற்றி எழுதுக.

**76.** பார்வை இழப்பிற்கான காரணங்களைக் கூறுக.

**77.** நுகர்வோரின் தனி உரிமைகள் யாவை ?

**78.** சூரிய அடுப்பு பற்றி எழுதுக.

**79.** ஏதாவது இரண்டு எல்லைக்கோடு தையல்கள் ( Outline stitches ) பற்றி குறிப்பு வரைக.

## பகுதி - ஈ

VIII. *குறிப்பு :* ஏதேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்கவும். விடைகள் ஒவ்வொன்றும் 200 வார்த்தைகளுக்கு குறையாமல் இருக்க வேண்டும். $4 \times 10 = 40$

**80.** காதின் அமைப்பைப் படம் வரைந்து பாகங்களைக் குறி.

**81.** புரதக் கலோரி குறை நோய்க்கான அறிகுறிகள் மற்றும் சிகிச்சையைப் பற்றி விவரி.

**82.** நடுவயதினரின் ( Middle age ) சிறப்புப் பண்புகள் பற்றி எழுதுக.

83. ஆடைகளை தேர்வு செய்வதற்கு உதவும் கருத்துக்கள் யாவை ?

84. விவாதங்களின் வகைகளை விளக்குக.

85. அ) ஏங்கலின் ( Engel ) நுகர்தல் விதி - வரையறு 5

ஆ) ஒரு நபரின் மாத வருமானம் ரூ. 1,000. அவரின் மாதச் செலவு ரூ. 960 போக மீதியை சேமிக்கிறார். அவரது மாத சேமிப்பின் சதவிகிதத்தைக் கணக்கிடுக. 5